**இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | **உரிய நியமம் தொடர்பாக இணங்காமை** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 02 | | |
| (i) | முன்னைய ஆண்டு குறைத்து மதிப்பிடப்பட்ட ரூபா 528,434 வருமான வரியானது வரிக்கு முன்னரான இலாபத்திலிருந்து | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது ஆண்டுக்கான வருமான வரிக்குப் பின்னரான | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | கழிக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது வருமானம் மீள சீராக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 293,425 தொகையான வரி கழிக்கப்பட்ட பின்னரான நட்டம் வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | இலாபம் எடுக்கப்பட்டது. | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,803,980 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது, முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 21,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் நிதி நடவடிக்கைகளின் கீழான காசு உட்பாய்ச்சல் ரூபா 1,790,137 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோரில் மாற்றத்தை கணிப்பிடும் போது செலுத்த வேண்டிய வரியும் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, அதன் பிரகாரம் கடன்கொடுத்தோரில் மாற்றம் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 14 இன் பிரகாரம் முக்கிய முகாமைத்துவ குழுவின் இழப்பீடு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் நிறுவனத்தின் பணிப்பாளருக்கு நிறுவனம் செலுத்திய ரூபா 3,235,669 தொகையான நலன்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 14 இன் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துவது எதிர்கால நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு குறைத்து ஏற்பாடு செய்யப்பட்ட வருமான வரிச் செலவினம் மீளாய்வாண்டின் வருமான வரிச் செலவினத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அது நிர்வாகச் செலவினங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நிர்வாகச் செலவினம் ரூபா 528,434 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் வருமான வரிச் செலவினம் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டது. | குறைத்து ஏற்பாடு செய்யப்பட்ட வரியின் உண்மையான கொடுப்பனவு, நிர்வாகச் செலவினங்களின் கீழ் கம்பனியின் வருமான வரி உப தலைப்பாகக் காட்டப்பட்டது, இதனால் மீளாய்வாண்டின் இலாபம் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான வரிச் செலவினம் மற்றும் நிர்வாகச் செலவினம் ஆகியவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய வருமான வரியானது ரூபா 8,353,488 மொத்த முதலீட்டு வருமானத்தில் ரூபா 417,674 தொகையான செலுத்தப்பட்ட முற்பண வருமான வரி கழிக்கப்பட்டு | நிறுவனம் ஈட்டிய ரூபா 7,825,286 தேறிய வட்டி வருமானம் பிடித்துவைத்தல் வரியைக் கழித்த பின்னர் எடுக்கப்பட்டதால் 2023 | I.மொத்த முதலீட்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் ஆண்டுக்கான வருமான வரியானது ரூபா 7,935,814 தேறிய முதலீட்டு வருமானத்தில் கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான வரி ரூபா 292,372 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டில் வருமான வரிச் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2.வருமான வரி கணிப்பீடு சரியாக செய்யப்பட்டு அதிகரித்துக் காட்டப்பட்ட வருமான வரியை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளில் இருந்து பெற வேண்டிய வருமானம் ரூபா 520,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2022/23 கல்வியாண்டில் மூன்று டிப்ளோமா கற்கைநெறிகள் தொடர்பான பெறவேண்டிய வருமானம் 2023 நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக உள்ள ரூபா 1,541,250 தொகையான கற்கைநெறிக் கட்டணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,541,250 கூட்டுமொத்தமான அறவிடக்கூடிய தொகையை அறவிடுவதற்கும், அறவிடமுடியாத வருமானம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் சம்பந்தப்பட்ட பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம், உரிய அறிக்கைகள் கிடைத்த பின்னர் மேலும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கும், நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 ஒக்தோபர் 25 ஆம் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02 இன் IV | தொழில்முறை படியை செலுத்தும் போது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் உள்ள சேவைக் காலம் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், பிரதம நிறைவேற்று அதிகாரியின் முந்தைய | இலங்கை உள்ளூராட்சி நிறுவகத்தின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளகக் குறிப்பொன்றின் மூலம் 2021 இல் அவரிற்கு செலுத்த வேண்டிய மொத்த சம்பள ஏற்ற நிலுவைகளில் இருந்து முதலாவது தவணையாக | மேலதிகக் கொடுப்பனவு தொகை உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சேவை காலத்தை கருத்தில் கொண்டு ரூபா 321,677 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அத்தகைய மேலதிக கொடுப்பனவு தொகையை கழிப்பதற்கு ஒப்புக்கொண்டார். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,795,448 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,079,104 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 716,344 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்க பங்களிப்பு, டிப்ளோமா கற்கைநெறி வருமானம் மற்றும் செயற்திட்ட வருமானம் முறையே ரூபா 6,457,000, ரூபா 5,609,350 மற்றும் ரூபா 3,535,823 ஆல் குறைவடைந்த போதிலும் குறுகிய கால கற்கைநெறிகளிலிருந்தான வருமானம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 8,074,794 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்திட்ட செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 6,613,883 ஆல் குறைவடைந்தமை என்பன இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 பெப்ரவரி முதல் 2021 ஆகஸ்ட் வரை முன்னாள் பணிப்பாளருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 513,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 171 ஆவது ஆளுகை சபை மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவது தொடர்பில் வழங்கிய தீர்மானம் முன்னாள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை உள்ளூராட்சி நிறுவகம் தொடர்பான 1999 இன் 31 ஆம் இலக்க சட்டத்தின் 3(அ), (ஆ) இன் பிரகாரம் நிறுவகத்தின் முக்கிய பணிகளில் ஒன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தமது கடமைகளை மிகவும் திறமையாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்காக பயிற்சியை வழங்குவதும் ஒட்டுமொத்த வேலை மற்றும் பயிற்சி கற்கைநெறிகளை நடாத்துவதும் ஆகும். எனினும், மீளாய்வாண்டில் 10 டிப்ளோமா கற்கைநெறிகளையும் 25 சான்றிதழ் கற்கைநெறிகளையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 02 மற்றும் 04 | போதுமான குறைந்தபட்ச விண்ணப்பங்கள் இல்லாததால் அனைத்து கற்கைநெறிகளையும் திட்டமிட்டவாறு நடாத்த முடியவில்லை. | சட்டத்தால் ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறிகளே நடாத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | குறித்த சட்டத்தின் 3 இன் (எ) பந்தியின் பிரகாரம் மாகாண மற்றும் உள்ளூராட்சித் துறையில் ஆலோசனைத் தன்மையில் பணிகளை ஏற்பது நிறுவனத்தின் கடமையாக உள்ள போதிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அத்தகைய பணி எதுவும் ஏற்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிறுவனத்தின் பதவியணியினரில் ஒரே ஒரு ஆலோசகர் மாத்திரமே இருந்தார் என்பதும் அந்த உத்தியோகத்தரும் 2023.12.31 இல் ஓய்வு பெற்றதால், நிறுவனத்தில் ஆலோசனைக்கு பதவிகளோ உத்தியோகத்தர்களோ காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் 2021 முதல் 2023 வரை, எமது நிறுவனம் அந்த வகையான பணிகளைப் பெற்றிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | உள்ளூராட்சி அமைப்புக்களுக்காக இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களை அமுல்ப்படுத்துவதற்கு, மாகாண மட்டத்தில் உள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் அந்த மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சரால் விதிகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. 7 மாகாண சபைகளில் இவ்வாறான விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்காத போதிலும் 7 மாகாணங்களிலும் ரூபா 5 மில்லியன் செலவில் புதிய கணக்கீட்டு முறைமை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | அமைச்சு தற்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து இந்த விடயத்தில் செயற்பட்டு வருகின்றதுடன் புதிய கணக்கீட்டு முறைமையின் குறைபாடுகளை சீர்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதுடன் தற்போது இறுதிக் கட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. | நியமத்தை அமுல்ப்படுத்துவதற்கு மாகாண மட்டத்தில் விதிகள் வகுக்கப்பட வேண்டும். புதிய கணக்கீட்டு முறைமைக்கு, ஏற்கனவே உள்ள குறைபாடுகளை சீர்செய்து, பின்னர் அமுல்ப்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வளவாளர் பட்டியல் ஆளுகை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படாமல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,510,604 மற்றும் ரூபா 2,159,000 செலுத்தப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டிற்காக வளவாளர்களின் பதிவு மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் ஆளுகை சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்படும். | வளவாளர் பட்டியலை ஆளுகை சபை அங்கீகரிக்க வேண்டும். |
| (உ) | நிறுவனம் தொடர்பான சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு | நிறுவனம் பொருத்தமான சுற்றாடல் மற்றும் |

| | | |
|---|---|---|
| செயற்படுத்தப்படவில்லை. மேலும், கழிவு முகாமைத்துவமானது உள்ளூராட்சி நிறுவனங்களின் முக்கிய பணியாக உள்ள போதிலும் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயலமர்வு நிறுவனத்தால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மற்றும் திடக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறியை நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் போதிய விண்ணப்பங்கள் இல்லாததால் கற்கைநெறியை நடாத்த முடியவில்லை. | சமூக பொறுப்புக்களை இனங்கண்டு அதற்கிணங்க ஆற்றப்பட வேண்டிய வகிபங்குகளை இனங்காண வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல்களின் 2.6.1 (ii) ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பெறுகை செயன்முறையைத் தொடங்குவதற்கு முன்னர் விபரக்குறிப்பை மதிப்பாய்வு செய்து அங்கீகரிக்க வேண்டும். எனினும் பெறுகை அறிவிப்பு வெளியான 13 நாட்களுக்குப் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டது. மேலும், பெறுகை வழிகாட்டல்களின் 2.8.1 (ஆ) மற்றும் (இ) பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடய அறிவைக் கொண்ட நிபுணர் ஒருவர் இந்தக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கவில்லை. மின்-உள்ளடக்க தொகுதிகளைத் தயாரிப்பதற்குத் தகுதியான தரப்பினரைத் தெரிவுசெய்வதற்கான விளம்பரம் 2022 நவம்பர் 25 மற்றும் 26 இல் வரிசை அமைச்சின் இணையத்தளத்தில் மாத்திரமே வெளியிடப்பட்டது. பங்கேற்பதற்கான நியாயமான, சமமான மற்றும் அதிகபட்ச வாய்ப்பை ஏனைய தகுதியுள்ள ஆர்வமுள்ள தரப்பினருக்கு வழங்காததால் கேள்விகளுக்கான அழைப்பு 2023 மார்ச் 03 வரை 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டல்களின் 6.2.2 இன் பிரகாரம் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச காலம் 21 நாட்களாக உள்ள போதிலும் 3 சந்தர்ப்பங்களில் 14 நாட்கள், 4 நாட்கள் மற்றும் 9 நாட்களே வழங்கப்பட்டிருந்தன. | SLILG ஆனது குறைந்த எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களை மாத்திரமே கொண்டிருப்பதால், நிரந்தரமாக நியமிக்கப்படும் தொழில்நுட்பக் குழு காணப்படவில்லை, எனவே அதற்கான உத்தியோகத்தர்கள் செயல்நிமித்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள். விடய அறிவு உள்ள வெளியக உத்தியோகத்தர் ஒருவரையோ அல்லது தேவையின் அடிப்படையில் வரிசை அமைச்சிலிருந்து விடய உத்தியோகத்தர் ஒருவரையோ நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>SLILG ஆல் வெளியிடப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் கூறுவிலைகள் கிடைக்காததால், அந்த விடயங்களுக்கான கூறுவிலை சமர்ப்பிக்கும் திகதிகள் நீடிக்கப்பட வேண்டியிருந்தது. கேள்வி அழைப்புக்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, கேள்விகள் கிடைக்காததால், திகதியை மேலும் இரண்டு மாதங்களுக்கு நீடிக்க வேண்டியிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டும். அனைத்து ஆர்வமுள்ள மற்றும் தகுதியுள்ள தரப்பினரும் பெறுகை செயன்முறையில் பங்கேற்பதற்கு அதிகபட்ச வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான திகதிகள் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் வழங்கப்பட வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 இல் நிர்மாணம் தொடங்கப்பட்ட போதிலும் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள ரூபா 46,275,072 கிரயமான கட்டிடம் விளைவற்றிருந்தது. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் 2022.04.18 இல் மூன்று துறைசார் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்திருந்ததுடன் இதுவரையில் இந்த நிர்மாணம் தொடர்பான முழுமையான அறிக்கையை அவர்கள் தயாரித்து அதனை அமைச்சிடம் வழங்கியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதென ஒப்பந்ததாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டமை செல்லாது என அவர் மீண்டும் அறிவித்தார். | நிர்மாணப் பணி பரீச்சிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். |

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 53 உள்ளூராட்சி பதவிகளுக்கான விசேட செயற்பாட்டு நடைமுறைகளை அமைக்கும் பணிகளுக்காக முறையான மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி வளவாளர்கள் தெரிவு செய்யப்படவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் கைச்சாத்திடப்படாததுடன் திறைசேரி அங்கீகாரம் பெறப்படாமல், 2023 திசெம்பர் 31 அளவில் தொடர்புடைய பணிகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களின் அதிகாரிகளிற்கான UNDP-CDLG இலிருந்து பெறப்பட்ட மானியத்தைப் பயன்படுத்தி ரூபா 696,000 பங்கேற்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | வளவாளர்களைத் தெரிவுசெய்வது UNDP-CDLG ஆல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பு மாத்திரமே எங்களுக்கு ஒதுக்கப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களை ஒருங்கிணைத்து இப்பணியை முன்னெடுத்தோம் மேலும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு இப்பணியை மேற்கொள்வதற்காக விடுமுறை வழங்குமாறு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு கடிதங்களை மாத்திமே | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் வளவாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட வளவாளர்களுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். மேலும் கொடுப்பனவுகளுக்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாங்கள் வழங்கியுள்ளோம். அனைத்து கொடுப்பனவுகளும் நிறுவனத்தின் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்படுகிறது. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020, 2021 மற்றும் 2022 இன் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கைகள் தற்போது மொழிபெயர்ப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த சில மாதங்களுக்குள் அவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வேன். | ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் உள்ள அனைத்து உள்ளுராட்சி அதிகாரிகளுக்கும் பயிற்சி கற்கைநெறிகளை நடாத்தும் ஒரே நிறுவனமாக இந்த நிறுவனம் உள்ள போதிலும் அது தொடர்பான அனைத்து விபரங்களையும் சரியாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொள்வதற்கு இயன்றதாக ஒரு தரவு தளம் பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து துறைகளின் தகவல்களையும் ஒரே தகவல் முறைமைக்கு கொண்டு வருவது குறித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் ஆலோசிக்கப்பட்டு முகாமைத்துவத்தின் கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. | அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு தகவல் முறைமை பேணப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலை நிறுவனம் அறிந்திருக்காத காரணத்தினால் அது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பல்வேறு பயிற்சி செயலமர்வுகள் மூலம் நேரடியாக உள்ளடக்கப்பட்டுள்ளன. பயிற்சி செயலமர்வுகள் மூலம் வழங்கப்படும் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அறிவு மற்றும் மேம்படுத்தப்பட்ட திறன்கள் ஏனைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான வழிகாட்டலை வழங்கும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |